## அரசுத் துறைத் தலைவர்களுக்கான

# நிர்வாக மேலாண்மைப் பயிலரங்கம் தொடக்கம்

காரைக்கால், நவ. 28: காரைக்கால் அரசுத் துறைத் தலைவர்களுக்கான நிர்வாக மேலாண்மை குறித்த 3 நாள் பயிலரங்கம் புதன்கிழமை தொடங்கியது.

புதுச்சேரி அரசின் திட்டம், ஆராய்ச்சித் துறை சார்பில் பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகத்தில் இந்தப் பயிலரங்கைத் தொடக்கிவைத்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமார் பேசியது:

பல்வேறு துறைகளின் அரசுத் துறைத் தலைவர்களுக்கு, நிபுணர்களின் ஆலோசனை பேருதவியாக இருக்கும்.

துறை நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த இது உதவும். அரசுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் இது உதவும். இதை அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை இயக்குநர் விஜயலட்சுமி வாழ்த்தினார்.

முதல் நாள் பயிலரங்கில், சென்னை அண்ணா இன்ஸ்டியூட் ஆப் மேனேஜ்மென்ட் திட்ட இயக்குநர் பொன்னுசாமி, மேனேஜ்மென்ட் கன்சல்டன்ட் டாக்டர் எஸ்.என். வெங்கடேசன், தாமோதரன் மற்றும் திருச்சி பொதுப்பணித் துறை துணைக் கண்காணிப்பாளர் மனோராஜ் உள்ளிட்டோர் பேசினர். காரைக்கால் திட்டத் துறை துணை இயக்குநர் சாந்தாவில்லியம்ஸ் வரவேற்றார்.




பயிலரங்கத்தைத் தொடக்கிவைக்கிறார் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமார்.